கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம், நீவது.,
மாநில அணை பாதுகாப்பு அமைப்பு, தரமணி, சென்னை-113.

முன்னிலை : பொறி.சி.கார்த்திகேயன் (எ) ஆனந்த், பி.டெக்.,
கண்காணிப்புப் பொறியாளர், நீவது.,
மாநில அணை பாதுகாப்பு அமைப்பு

**செயல்முறை ஆணை எண்.எ1/754/2023 நாள் 05.11.2024**

பொருள்: பணியமைப்பு - நீவது. - தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதி - திருமதி.G.மகாலட்சுமி, இளநிலை உதவியாளர் பதவியில் - பணிவரன்முறை செய்தல் ஆணை - வழங்குதல்.

பார்வை: 1)முதன்மைத் தலைமைப்பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீவது., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செ.மு.ஆ.எண். எஸ்.3(3)/35336/2023 நாள் 22.09.2023.

2)இவ்வலுவலக செ.மு.ஆ.எண். எ1/ 0754 /2023 நாள் 05.10.2023.

........

பார்வை 1இல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீவது., சென்னை.5 அவர்களின் செயல்முறை ஆணையின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் இவ்வலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, திருமதி.G.மகாலட்சுமி அவர்கள் கண்காணிப்புப் பொறியாளர், நீவது, மாநில அணை பாதுகாப்பு அமைப்பு, சேப்பாக்கம், சென்னை-5 அலுவலகத்தில் 05.10.2023 முற்பகல் அன்று இளநிலை உதவியாளராக பணியேற்றார்.

தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணி விதிகள் (பொது விதி) 23 ஏ(1)-ன்படி தனியரது பணி 05.10.2023 மு.ப. அன்று முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

மேலும் இந்த பணிவரன்முறை ஆணையானது, சென்னை உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IVன் தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் இவ்வாணை வழங்கப்படுகிறது.

| வரிசை எண். | பெயர் | தேர்வாணைய வரிசை எண் | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | G.மகாலட்சுமி, | 38 | 22.03.2000 | 05.10.2023 மு.ப. | 05.10.2023 மு.ப. |

இவர் தனது தகுதிகாண் பருவத்தினை பணிவரன்முறைப்படுத்தப்பட்ட நாளான 05.10.2023 மு.ப. முதல் துவக்கியதாகக் கருதப்படுகிறார். மேற்படி நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் இவர் வைக்கப்படுகிறார்.

தமிழ்நாடு சார்நிலைப் பணித் தொகுதி விதிகள் 23 (ஏ) (ii)ன்படியும் தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதிகளின்படியும் திருமதி.G.மகாலட்சுமி, இளநிலை உதவியாளர் தனது தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளருக்கான பயிற்சியினை பெற்று வெற்றிகரமாக முடித்தல் வேண்டும் என்ற நிபந்தனையின்பேரில் 05.10.2023 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணித் தொகுதியின் கீழ் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் துவக்கி ஆணை வழங்கப்படுகிறது.

5/11/24

கண்காணிப்புப் பொறியாளர், நீவது.,
மாநில அணை பாதுகாப்பு அமைப்பு, சென்னை-113.

பெறுநர்
திருமதி.கா.மகாலட்சுமி,
இளநிலை உதவியாளர்,
கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்,நீவது.,
மாநில அணை பாதுகாப்பு அமைப்பு, தரமணி, சென்னை.113.

5/11/24